முருகப்பெருமான் துணை

**மகான் யோகச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. மனுதர்மம் காத்து உலகினில்
மக்களை மீட்டிட தேற்றிட
ஞானபலமாக அவதாரம் எடுத்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது கலை திங்கள்
வரங்களென முதல்திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் முதல் நாள் 15.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை யோகச்சித்தர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசி வென்ற ஞானிகள் படை
வலியவந்து வரம் தரும் சபையாக
4. சபையாகப் பிரணவக்குடில் இருக்க
சற்குருவான அரங்கன் திருவடி
அபயமென பற்றி மக்கள் வர
அறிவிப்பேன் ஞானிகளின் ஆசி
5. ஆசி அனுகும் அனைவருக்கும்
ஆற்றலாகக் கிட்டி இனிதே
ஆசிபட உலகியல் வாழ்வினில்
அனைத்து வகை தேற்றமும்
6. தேற்றமும் மெய்யான வழிகளில்
தேவைக்கு மேலான வண்ணம்
ஆற்றல்பட பூர்த்தி கண்டு
அரங்கமகானால் சகலதும் நடக்கும்
7. நடக்கவே இல்லறத்தார்கட்கு
நடைமுறைத் தேவைகளோடு
இடர்களை வெல்லும் பலமும்
எதிர்காலம் மேல் தெளிவு திட்டமாகி
8. ஆகியே நல்லோர் தொடர்பும்
ஆவணம் பிற ஜீவனம் தனிலும்
மகிழவே லாபங்கள் பெருகி
மனபலம் தனபலம் கூடியே
9. கூடியே அரங்கன் தருமம்
குவலயத்தில் காக்கும் படியே
நாடியே செல்வச் சீமான்களாக
ஞானவான்களாக மாற்றம்

10. மாற்றம் கண்டு உலகோர்
மாதவசி அரங்கன் வழியில்
ஆற்றல்பட தேறி இனிதே
அனைவரும் ஞானிகளாவர்

11. ஆவரே அரங்கன் படைக்கும்
அகிலமாற்றம் தரும் ஞானஆட்சியில்
அவரவர் இடம் பெற்று சிறப்பர்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–